# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

## தரம் இரண்டு (முதலாம் தவணை)

## 2022

## கிறிஸ்தவம்

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**நாட்டின் இடர் சூழ்நிலை காரணமாக பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் மற்றும் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021, 2022ம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்ப டுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில், முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரமுண்டு. மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புத் தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புக்களை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது எனக் குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகளை வீட்டில் இருந்து செய்வித்தலின் போது மாணவர்கள் எந்த விதத்திலும் இடர் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி என்பவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

கிறிஸ்தவம்    தரம் 2

| | பாடத்திற்கு அவசியமான தொனிப்பொருள் | தேர்ச்சி | கற்றற் பேறுகள் | விடய உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டி நூல்/பாடப் புத்தகத்தின் செயற்பாடு கள் | ஆசிரியர் வழிகாட்டி நூல்/பாடப் புத்தகத்தின் செயற்பாட்டிற் கான பக்கம் | காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடவுளின் அன்புக்கு மாறுத்தரமாக இறைபண்புகளை வளர்த்தல் | கடவுளின் அன்புக்கு மாறுத்தரமாக கிறிஸ்தவ நற்பண்புகளை வளர்ப்பார் | முன்மாதிரியான கிறிஸ்தவ பிள்ளையாக நற்செயல்களை, கிறிஸ்தவப் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டிய நல்ல கிறிஸ்தவ பண்புகளை கலந்துரையாடுவார். | பெறுமதிமிக்க கிறிஸ்தவ விழுமியங்கள் உரோமையர் 12:10-13 | செய்முறை 1,2,3<br>பாடப் புத்தகம் 6ம் பாடம் | ப. 12-13<br>ப. 9-11 | 1 மணி 15 நிமி |
| 2 | ஆண்டவர் இயேசுவை அறிதல் | ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்வார். ஆவரைப் பின்பற்றி வாழ்வார் | .எருசலேம் ஆலயத்தில் போதகரின் மத்தியில் உரையாடிய நிகழ்வில் வினவும் சிறு வாய்மொழி வினாக்களுக்கு விடையளிப்பார்<br><br>இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வை வகுப்பிலுள்ள அனைவருக்கும் கூறுவார் | ஆலயத்தில் போதகர்மார் சொல்வதைக் கேட்டலும் வினவுதலும் லூக்கா 2: 46-47<br><br>இயேசு திருமுழுக்குப் பெறல் மாற்கு 1: 9-14 | செய்முறை 1,2,3,4<br>பாடப் புத்தகம் 7ம் பாடம்<br><br>செய்முறை 1,2,3 | ப. 14 -15<br>ப. 12-14<br><br>ப. 16-17 | 1 மணி 15 நிமி<br>1 மணி 15 நிமி<br><br>1 மணி 15 நிமி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | .இயேசு பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தார் என்பதை முன்னுதாரணமாகக் கொண்டு அவர்களது பெற்றோருக்கு கீழ்ப்படியும் சந்தர்ப்பத்தைக் கூறுவார் | தாய் சொல்வதைக் கேட்டு நல்ல மாறுத்தரம் காட்டல் யோவான் 2:1-12 | பாடப் புத்தகம் 8ம் பாடம்<br>செய்முறை 1,2,3<br>பாடப் புத்தகம் 9ம் பாடம் | ப. 15-16<br>ப. 18-19<br>ப. 17-19 | 1 மணி 15 நிமி |
| 3 | இயேசுவின் வாழ்வின் சிறப்புத் தன்மைகளை அறிதல் | இயேசுவின் வாழ்வின் சிறப்புத் தன்மைகளை அறிந்து கொள்வார் | இறைபடைப்புக்களைப் போசித்துப் பராமரிக்கும் கடவுள் எமக்கு அனைத்தையும் வழங்குகின்றார் என்பதை விசுவாசித்து,காட்டு மலர்க்கொத்து,குருவிக் கூடு மாதிரி உருக்கள் தயாரிப்பார்<br>.கடவுளால் படைக்கப்பட்ட அனைவரும் பெறுமதிமிக்கவர் என்பதை உறுதிப்படுத்த வானத்துப் பறவை குறித்த இயேசுவின போதனையைக் கூறுவார் | கடவுள் அனைத்தையும் அருளுகின்றார் மத்தேயு 6: 25 -28<br>அனைவரும் பெறுமதி உடையவர்.வானத்துப் பறவைகள் மத்தேயு 10 :29 -31 | செய்முறை 1,2,3<br>பாடப் புத்தகம் 10ம் பாடம்<br>செய்முறை 1,2,3<br>பாடப் புத்தகம் 11ம் பாடம்<br>செய்முறை 1,2,3<br>பாடப் புத்தகம் 12ம் பாடம் | ப. 19-20<br>ப. 20-21<br>ப. 21-22<br>ப. 22-23<br>ப. 23-24<br>ப. 24-25 | 1 மணி 15 நிமி<br>1 மணி 15 நிமி<br>1 மணி 15 நிமி |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இயேசு கற்பித்த இறைவேண்டலின் துணையுடன் கடவுளை அறிந்து தனியாக ஜெபத்தினை ஜெபிப்பார் | இயேசு கற்பித்த ஜெபம்<br>மத்தேயு 6 : 9-13 | | | | |